SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING



# செவித்திறன் சோதனை என் குழந்தைக்கு ஏன் அவசியம்?

பிறந்த முதல் சில வாரங்களில் உங்கள் பிள்ளைக்கு தொடர்ந்த பல உடல்நலப் பரிசோதனைகள் அளிக்கப்படும். இவற்றில் ஒரு சோதனை செவித்திறன் இழப்பு இருக்கிறதா என்பதை சோதிக்கும். குழந்தை பிறந்ததும் கூடிய விரைவில் இச்சோதனை செய்யப்படும்.

நீங்களும் உங்களது குழந்தையும் மருத்துவமனையில் இருக்கும்போதே இந்த செவித்திறன் சோதனையை செய்துகொள்ள இயலவில்லை என்றால், நீங்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறிய பிறகு, உங்களது உள்ளூர்ப்பகுதியிலுள்ள இடம் ஒன்றில் வெளிநோயாளியாக இச் சோதனையை மேற்கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

## செவித்திறன் சோதனை என் குழந்தைக்கு ஏன் அவசியம்?

பிறக்கும் ஒவ்வொரு 1000 குழந்தைகளிலும் ஏறத்தாழ ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்குக் கணிசமான அளவில் செவித்திறன் இழப்பு இருக்கும்.

உங்களுக்கும் உங்களது குழந்தைக்கும் சரியான அறிவுரையும், ஆதரவும் கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்களது குழந்தைக்குக் காது எவ்வளவு நன்றாகக் கேட்கிறது என்பதைக் கூடிய விரைவில் தெரிந்துகொள்வது முக்கியமாகும். நாம் பேசும் விதத்தினைக் குழந்தைகள் ஒரு வருடம் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த பிறகே, தமது முதல் வார்த்தையைக் குழந்தைகள் சொல்வார்கள்.

## எனது குழற்தையின் செவித்திறன் சோதனையின்போது என்ன நடக்கும்?

உங்களது குழந்தை உறங்கிக்கொண்டிருக்கும் போதோ அல்லது அமைதியாக ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் போதோ, பயிற்சி பெற்ற செவித்திறன் சோதனையாளர் ஒருவர் இச்சோதனையை மேற்கொள்வார். இச்சோதனை செய்யப்படும்போது நீங்கள் உங்கள் குழந்தையுடன் அருகில் இருக்கலாம்.

சிறு உணர்கருவிகளை (sensor pads) சோதனையாளர் உங்கள் பிள்ளையின் தலை மீது பொருத்தி ஒரு காதுஒலிக் கருவி மூலம் மென்மையான சப்தங்களை குழந்தையின் காதுகளில் எழுப்புவார். இந்த சப்தங்களுக்கு உங்கள் குழந்தை புரியும் எதிர்ச்செயல்களை உணர்கருவிகள் பதிவு செய்யும்.

இச்சோதனை பெரும்பாலும் குழந்தையை நிலைகுலையச் செய்யாது. இச்சோதனை முடிய 10 – 20 நிமிடங்கள் ஆகலாம்.

## முடிவுகள்

செவித்திறன் சோதனை முடிந்த உடனேயே முடிவுகள் உங்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்டு, உங்களது குழந்தையின் ‘சொந்த உடல்நலப் பதிவே’(Blue Book)ட்டில் பதிக்கப்படும்.

இன்னொரு பரிசோதனை வேண்டும் என்று முடிவுகள் காண்பித்தால், உங்கள் குழந்தைக்கு செவித்திறன் இழப்பு இருக்கிறது என்று அர்த்தமாகிவிடாது. இப்படிப்பட்ட முடிவிற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். பிறப்பிற்குப் பிறகு உங்கள் குழந்தையின் காதில் திரவம் அல்லது அடைப்பு இருப்பது மறு பரிசோதனைக்கான மிகப் பொதுவான காரணமாகும்.

## எனது குழந்தை வளர வளர நான் என்ன செய்யவேண்டும்?

நாட்கள் ஆக ஆக, செவித்திறன் ஒரே மாதிரியாக இல்லாமலும் இருக்கலாம்.

உங்கள் குழந்தையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி ஆகியவற்றோடு, சப்தங்களைக் கேட்டு அவர்கள் புரியும் எதிர்ச்செயல்களையும் கண்காணித்துவர வேண்டியது முக்கியமாகும்.

உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள சரிபார்ப்பு அட்டவணையைப் பாருங்கள்.

எதிர்காலத்தில் உங்கள் குழந்தையின் செவித்திறன் அல்லது பேச்சு மற்றும் மொழிவளர்ச்சி குறித்து உங்களுக்குக் கவலையாக இருந்தால், உங்கள் குழந்தையின் செவித்திறனை சோதித்துப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை தயவு செய்து செய்யுங்கள்.

செவித்திறனை எந்த வயதிலும் சோதிக்கலாம்.

**மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து கீழ் வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:**

http://www.health.nsw.gov.au/kids-families

**உள்ளூர்த் தொடர்பு/சந்திப்புநேர விபரங்கள்**

சுகாதார அறிவுரைக்காக *healthdirect Australia* –உடன் தொடர்புகொள்ளுங்கள்.
http://www.healthdirect.gov.au/
**1800 022 222**

NSW GOVERNMENT | Health

**Tamil** - Why does my baby need a hearing screen?

SWIS-H
STATEWIDE INFANT SCREENING - HEARING

# செவித்திறன் சோதனை குறித்த கீழ்வரும் விடயங்களைச் சரிபாருங்கள்

| | |
|---|---|
| **பிறந்ததிலிருந்து 3 மாதங்கள் வரை** | பெரும் சத்தங்கள் கேட்கும்போது குழந்தை எதிர்ச்செயல் புரியும் |
| | பழக்கப்பட்ட சத்தங்கள் அல்லது குரல்களைக் கேட்கும்போது அழாமல்அமைதியடையும் |
| | கூவுவது போன்ற ஒலிகளை ஏற்படுத்தும் |
| | குழந்தையுடன் யாராவது பேச்சுக் கொடுத்தால், பேசுபவரது முகத்தைக் குழந்தை பார்க்கும் |
| **3 – 6 மாதங்கள்** | ஒலிகள் வரும் பக்கமாக கண்கள் அல்லது தலையைத் திருப்பும் |
| | பேசுவது போன்ற ஒலிகளை எழுப்பத் துவங்கும் |
| | தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் சிரிக்கும் அல்லது சத்தம் எழுப்பும். |
| **6 – 9 மாதங்கள்** | ‘அப்பா’, ‘அம்மா’ ‘பபா’ போன்ற மழலை மொழி பேசும் |
| | மற்றவரது கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காக சத்தம் எழுப்பும் அல்லது குரல் கொடுக்கும் |
| | ‘இல்லை’ என்ற சொல்லுக்கும், குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போதும் மறுசெயல் செய்யும். |
| | பாடல் மற்றும் இசை ஆகியவற்றிற்கு மறுசெயல் புரியும் |
| **9 – 12 மாதங்கள்** | மற்றவர்கள் பேசும் போது அதே போன்ற ஒலிகளை எழுப்பும் |
| | ‘பந்து’, ‘நாய்’ ‘அப்பா’ போன்ற சாதாரண வார்த்தைகளைப் புரிந்துகொள்ளும் |
| | மெல்லிய ஒலிகள் வரும் பக்கமாகத் தலை திருப்பும் |
| | தன் முதல் வார்த்தைகளைப் பேசத் துவங்கும் |
| **12 – 18 மாதங்கள்** | ஒவ்வொரு வாரமும் குழந்தை புதுப் புது வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு வருவது போல் தோன்றும் |
| | ‘பந்தை இங்கே எடு,’ என்பது போன்ற சாதாரணமாக சொல்லும் வேலைகளை செய்யும் |
| | மற்றவர்கள் கேட்கும்பொழுது ஆட்களையும், உடல் உறுப்புக்களையும் பொம்மைகளையும் சுட்டிக் காண்பிக்கும் |
| | தெளிவாக இல்லை என்றாலும், புதுப் பது வார்த்தைகளைத் தொடர்ந்து பேசி வரும் |
| **18 – 24 மாதங்கள்** | தான் கற்றுக்கொண்ட 100 – 200 வார்த்தைகளைக் குழந்தை அடிக்கடி பயன்படுத்திவரும். |
| | சாதாரண கதைகள் மற்றும் பாடல்களைக் காது கொடுத்துக் கேட்கும் |
| | ‘இன்னும் கொஞ்சம் வேண்டும்,’ என்பது போன்ற இரண்டு அல்லது மூன்று வார்த்தைகள் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கும் |

**குறிப்புகள்:**

NSW GOVERNMENT Health

© NSW Health September 2016 SHPN (NKF) 150184